ISSN : 2456-821X

*அவையம்* 3(1) 2019 *ப.எண்.* 40-50

புதிய அவையம்

SACRED HEART RESEARCH PUBLICATIONS

SACRED HEART COLLEGE

# சிந்துவெளிக்கு முந்துவெளி தென்பெண்ணை ஆறே

**சு.பிரேம்குமார்,**
உதவிப்பேராசிரியர்,
முதுகலைத் தமிழியல்துறை,
அரசுகலைக்கல்லூரி,
திருவண்ணாமலை.

*கட்டுரை பெறப்பட்டது : 05.06.2019* *ஏற்கப்பட்டது : 14.06.2019*

உலகில் எகிப்திய நாகரீகம், மெசப்பட்டோமிய நாகரீகம், இந்தியச் சிந்துவெளி நாகரீகம் முதலான நாகரீகம், மிகவும் பழைமையானது என அறியப்படுகின்றன. இவையாவும் ஆற்றங்கரைச் செல்வ வளத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையேயாகும். எகிப்திய நாகரீகம் ‘நைல்’ ஆற்றையும், மெசப்பட்டோமிய நாகரீகம் ‘டைக்ரீஸ் -யூப்ரடிஸ்’ என்றும் இரண்டு ஆறுகளையும், சிந்துவெளி நாகரீகம் ‘சிந்து’ ஆற்றையும் அடிப்படையாகக் கொண்டவை. பழைய எகிப்திய நாகரீகமும், மெசப்பட்டோமிய நாகரீகம் எனப்படும் சுமேரிய நாகரீகம் - பாபிலோனிய நாகரீகம் -அசரிய நாகரீகம் ஆகிய நாகரீகங்களும் ஒரு காலத்தில் தோன்றி இன்னொரு காலத்தில் மறைந்துவிட்டன. மேலே குறிப்பிட்ட இந்த நாகரீகங்களில் எல்லாம் தொடர்ச்சியான வாழ்வியல் முறை அமையவில்லை. ஆனால் உலகின் மற்ற ஆற்றங்கரை நாகரீகங்களில் இல்லாத உயிரின வாழ்வியல் முறையானது தென்பெண்ணை ஆற்றங்கரை நாகரீகத்துக்கு உண்டு.

பெருவெடிப்புக் காலத்தில் வெடித்து சிதறிய துகள்கள் ஒன்றையொன்று ஈர்த்துக் கொண்டு மிகப்பெரிய கோளமாக மாறியது. தன்னுடைய அழுத்தத்தாலும் வெப்பத்தாலும் அக்கோள் வெடித்து சிதறி இன்று நாம் வாழும் பூமியாகவும் சூரிய மண்டலமாகவும் உருவானது. சூரியனுடைய ஈர்ப்பு விசையாலும் பூமியனுடைய மைய விலக்கு விசையாலும் பூமி முதலில் வட்டப்பாதையிலும் நீள்வட்டப் பாதையிலும் 23.5 டிகிரி சாய்மானத்தாலும்

புதிய அவையம்

தன்னைத்தானே சுற்றிக் கொண்டும் சூரியனையும் சுற்றி வரும் காலத்தில் பூமியினுடைய மையம் வட, தென் துருவங்களை விட வேகமாக சுற்றிய காரணத்தால் முதன்முதலில் பூமியில் நிலநடுக்கோட்டுப் பகுதியே பூமியாக (மண்ணாக) மாறியது. இவ்வாறு பூமி குளிர்ந்து கொண்டிருந்தபோது மிக அதிகளவில் மழை நீண்ட காலம் பெய்து கொண்டிருந்தது. இப்பெருமழையின் காரணமாக பள்ளங்களெல்லாம் கடலாக மாறுகிறது. கடலாக மாறிய காலத்தில் பூமியின் நிலப்பகுதியிலிருந்து ஆறு ஓடை வழியே ஓடிவந்த நீரானது கடலில் கலந்து கடல்நீரை வளம்மிக்க ஊட்டமிக்கதாக மாற்றியதன் காரணத்தால் அமீபா, கடல்பாசி போன்ற ஒரு செல் உயிரினங்கள் கடல்நீரில் தோன்றுகின்றன. அமீபா, கடல்பாசிகள் போன்றவை கடலலைகளின் வாயிலாக கடற்கரையில் அடித்து வரப்பட்டு (அ) கடல் காற்றால் அடித்து வரப்பட்டு, கரையில், மரம், செடி, கொடிகளாக மாற்றம் பெற்றது. அமீபா என்ற ஒருசெல் உயிரி பல்கிப் பெருகி மீனாக, ஆமையாக உருவடைந்து ஊர்வன, பறவை போன்றவையாக மாற்றமடைந்து விலங்கு நிலையையடைந்தது. விலங்கிலே சிறுகுரங்காக (Primitive monkey) தொடக்க கால குரங்கு (தேவாங்கு என அறியப்படுகின்றது) தேவாங்கு குரங்கிலிருந்து மற்ற குரங்குகள் பரிணாம வளர்ச்சியடைந்தன. இக்குரங்கிலிருந்து சிம்பன்சி கொரில்லா, உராங்குட்டான் ஆகிய குரங்கினங்கள் தோன்றின. இக்குரங்கினங்கள் அனைத்தும் வாழும் இடமாக நிலநடுக்கோட்டின் மையப்பகுதியாக அமைந்துள்ளது.

பூமியின் மையப்பகுதி ஒரே கண்டமாக இருந்த நிலைமாறி இரண்டு கண்டங்களாக உடைந்த நிலையில் இரண்டாவது கண்டமாகக் கருதப்படுகிற (லாரேசியா) கண்டத்தில்தான் இலெமூரியா கண்டம் இருந்தது. இந்த லெமூரியா கண்டத்தில்தான் ஆப்பிரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய மூன்று கண்டங்களும் ஒரே கண்டத்தில் இருந்த காலத்தில்தான் பாவாணரின் கூற்றுப்படி குமரிக்கண்டம் என்று அழைக்கப்பெறுகின்ற கண்டத்தில்தான் முதன் முதலில் உயிரினங்கள் தோன்றியிருக்கும் என்ற கூற்றினை பாவாணர் முன்மொழிவதை ஐரோப்பியர்கள் (மேற்கத்திய அறிஞர்கள்) ஏற்றுக்கொள்கின்றனர். இந்த குமரிக்கண்டம் அல்லது லெமூரியக்கண்டம் உடைந்து இணைகிறது. ஆஸ்த்திரேலியா பிரிந்து கிழக்கு முகமாக நகர்கிறது. ஆப்பிரிக்காவிலிருந்து இந்தியா தனியாகப் புரிந்து இந்தியா துணைக் கண்டமானது கடலில் நீண்ட காலமாக மிதந்து ஆசியக் கண்டத்தோடு இணைகிறது. இக்காலக்கட்டத்தில்தான் ஆதிக்குரங்கிலிருந்து குரங்கு மனிதனாக மேம்பட்டிருக்க வேண்டும். இத்துணைக்கண்டமானது ஆசிய கண்டத்தோடு மோதியபொழுது இந்தியாவில் பல ஆறுகள் உருவாகின. இவ்வாறு உருவாகிய ஆறுகளின் கரைகளில் நிலைத்த வாழ்வியல் உருவாகின.

மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை இந்திய வரலாற்றைத் தென்னிந்தியாவில் இருந்து தொடங்கப்பட வேண்டும் என்று நூற்றுஇருபது ஆண்டுகளுக்கு முன்னர் குறிப்பிடுகின்றார். ஆனால் இதுவரை இந்திய தொல்லியல் துறையோ வரலாற்றுத்துறையோ வட இந்திய வரலாறு பின்னோக்கிச் சென்றுவிடும் என்பதால் இதுவரை தென்னிந்திய வரலாற்றை வட இந்தியர்கள் கண்டுக் கொள்ளாமலேயே இருந்து வருகின்றனர். ஸ்காட்லாந்து ஈராஸ் பாதிரியாரும், ஜெர்மானிய ஆய்வறிஞர் இராபர்ட் புரூசும் சென்னைப் பல்லாவரத்தில் கண்டறிந்த பழங்கற்கால கற்கருவிகளின் வருடத்தை சுமார் ஐந்து இலட்சம் வருடங்கள் என்று குறிப்பிடுவதோடு, சென்னை நுண்கருவிகள் என்றும் அதற்குப் பெயரிட்டனர். தமிழ்நாடு தொல்லியல் துறை குடியம், அதிரம்பாக்கம் குகைகளில் கண்டறிந்த கற்கருவிகளின் காலம் சுமார் இருபது இலட்சம் வருடங்கள் பழைமையானது எனவும், மனித இனம் தோன்றி

உலகம் முழுவதும் பரவியது என்றும் கண்டடைந்துள்ளனர். மேலும் ஆப்பிரிக்க பெரும்பிளவு (great ripth valley) பள்ளத்தாக்கில் கண்டறிந்த கற்கருவிகளின் காலத்தையும் இருபது இலட்சம் ஆண்டுகள் பழைமையானது என்றும் கணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈராஸ் பாதிரியார், இராபர்ட் புரூஸ் குறிப்பிட்டுள்ள சென்னை நுண்கருவிகள் என்பது தென்பெண்ணை ஆற்று நுண்கருவிகள் என்று நாம் குறிப்பிடுவதே முறையாகும். ஏனெனில் தென்பெண்ணை ஆற்று இரு கரையோரங்களிலும் தொடக்கம் முதல் முடிவு வரையிலும் கற்கால கற்கருவிகள் ஏராளமாகக் கிடைப்பதால் இங்கு கற்கருவிகள் செய்யும் தொழிற்சாலைகள் இருந்திருக்க வேண்டும். இக்கற்கருவிகளைக் கொண்டு, மனித குரங்கும், குரங்கு மனிதரும் இக்கற்கருவிகளைக் கொண்டு வேட்டையாடுகின்றபொழுது உடல் திறனும், மூளைத்திறனும் மேம்பட்டதோடு சேப்பியன்ஸ் என்று அழைக்கப்படுகின்ற நவீன மனிதர்கள் இருபது இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் தென்பெண்ணை ஆற்றங்கரையோரம் தோன்றி உலகம் முழுமையும் ஆப்பிரிக்கா, தென்அமெரிக்கா, வடஅமெரிக்கா, ஆசியா போன்ற கண்டங்களிலும் பரவியிருக்கக் கூடும்.

**தென்பெண்ணையாறு**

வெண்ணெய் உருகும் முன்பே பெண்ணை பெருகும் என்பது பழமொழி. தென்பெண்ணை ஆறு தென்னிந்தியாவின் இயற்கை வளத்திற்கு அடிநாதமாக விளங்குகின்றது. இன்றைய கர்நாடக மாநிலம் சிக்கபல்லார் மாவட்டம் நந்தி மலையில் (நந்திதுர்க்கம்) உற்பத்தியாகி கர்நாடகத்தைக் கடந்து ஒக்கேனக்கல் என அழைக்கப்படுகின்ற புகைக்கல் வழியாக தமிழகத்தின் தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களை வளப்படுத்தி கடலூரில் வங்காள விரிகுடாவில் கலக்கிறது. ஏறக்குறைய 400கி.மீ கடந்து வரும் தென்பெண்ணையாற்றின் வளத்தை வலுப்படுத்த மார்கண்டஆறு, வன்னியாறு, கல்லாறு, கெடிலம் ஆறு, ஓலையாறு, துரிஞ்சலாறு இதன் முக்கிய துணையாறுகளாகும். நிலவியல் அடிப்படையில் தென்பெண்ணை ஆறு குறிஞ்சியாகிய மலையில் உருவாகி முல்லையாகிய காட்டில் பெருக்கெடுத்து ஓடி மருத நிலங்களை வளப்படுத்தி நெய்தலாகிய கடலில் கலக்கின்றது. வங்கக் கடல் மட்டத்திலிருந்து நான்காயிரம் (4000) அடி உயரமுள்ள மலைப்பகுதியில் உருவாகும் தென்பெண்ணை ஆறு கிழக்கு தொடர் மலைகளான ஜவ்வாதுமலை சேர்வராய் மலைத்தொடர் ஆகியவற்றின் தன் பயணத்தை நிலை கொள்ளச் செய்கின்றது. ஜவ்வாது மலைத்தொடர் சேர்வராயன் மலைத்தொடரின் சூழலியல் மண்டலமே தென்பெண்ணை ஆற்றை வளம் செழித்ததாக உருவாக்குகிறது. ஜவ்வாது, சேர்வராயன் மலைத்தொடரின் பல்லுயிர் பெருக்கத்திற்கான சூழலியல் மண்டலமாக திகழ்வதற்குக் காரணம் இப்பகுதியின் இயல்பாக அமைந்த குன்றுகள் சூழ்ந்த புதர்காடுகள் நிறைந்திருப்பதோடு இப்புதர் காடுகளில்தான் நீண்ட மரங்கள், குட்டை மரங்கள், செடிகள், கொடிகள், புற்கள் என்ற சூழலியல் தகவமைப்பை பெற்றிருக்கும். இப்புதர் காடுகளில்தான் புல்வகைகள் மிதந்திருக்கும். இப்புதர் காடுகளை ஒட்டியே மேய்ச்சல் தொழிலும் நிலைபெறும். இம்மேய்ச்சல் தொழிலை மேற்கொண்ட மக்களே நிலைத்த குடியினராக வாழத் தலைப்பட்டனர். உலகிலுள்ள வரலாறுகள் அனைத்தும் ஆற்றங்கரையை ஒட்டியே நாகரீகம் அமைந்திருக்கும் என ஒப்புக்கொண்டுள்ளன. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டதாக அறியப்படும் நிலையில் தொல்பழங்காலம், பழங்காலம், வரலாற்றுக்காலம், இலக்கிய காலமாக அறியப்பெறும் சங்ககாலம் தொடங்கி இன்று வரை மக்கள் உட்பட பல்வேறு

வகையான உயிரினத் தொகுதிகள் வாழும் தொடர்ச்சியான வாழ்வியல் தகவமைப்பை பெற்றுள்ள சிறப்பு தென்பெண்ணை ஆற்றங்கரை நாகரீகத்திற்கே உண்டு என்பதை நிறுவலாம்.

**நிலவியல் தன்மை**

தென்பெண்ணை ஆறு திருக்கோவிலூர் வந்தடையும்போது அகண்ட பெருவெள்ளமாக மாறுகின்றது. இம்மாற்றத்திற்குக் காரணம் திருவண்ணாமலையின் தென் பகுதியில் உருவாகும் ஓலையாறும் வடமேற்குப் பகுதியில் உற்பத்தியாகும் துரிஞ்சலாறும் ஏறக்குறைய 35கி.மீட்டர்களைக் கடந்து திருக்கோவிலூர் அருகே உள்ள மணம்பூண்டி என்ற பகுதியை ஒட்டிக் கலக்கின்றது. பல கிளையாறுகளும் ஓடைகளும் கலந்து புனல் காடாகப் பெருகி ஓடும் தென்பெண்ணையாறு திருக்கோவிலூருக்கு கிழக்கே 6 கி.மீட்டர் தொலைவில் வீரமடை சித்தமடம் என்னும் ஊர்களுக்கிடையில் தென்பெண்ணை ஆற்றிலிருந்து ஒரு சிற்றாறு பிரிந்து வந்து தென்கிழக்கில் 35 கி.மீட்டர் தொலைவு ஓடி கடலூர் வட்டத்தில் திருநாவுக்கரசர் பிறந்த திருவாமூருக்கு மேற்கே மிக அண்மையில் கெடிலத்தின் வடகரையில் கலக்கிறது. இந்த ஆற்றிற்கு 'மலட்டாறு' என்று பெயராகும். மலட்டாறு ஒரு பாலம் போல் பெண்ணை ஆற்றையும் கெடில ஆற்றையும் இணைக்கிறது. மலட்டாறு பெண்ணையாற்றின் பழைய வழித்தடமாகும்.

**கெடிலம்**

கெடிலம் கள்ளக்குறிச்சி வட்டத்தில் மையனூர் என்னும் ஊருக்கு அருகில தோன்றுகிறது. திருக்கோவிலூருக்குத் தென்மேற்கே 20கி.மீட்டர் தொலைவில் உள்ளது. திருக்கோவிலூரில் புனல்காடாக மாறும் தென்பெண்ணை ஆறானது மலட்டாற்றில் பெருகி ஓடி கெடிலத்தோடு கலந்து கடலூர் துறைமுகம் பகுதியில் நிலை கொள்கிறது.

**மரக்கல் (Food Fossil)**

ஓர் ஆறு கடலில் கலப்பதற்கு முன்னால் அதிலிருந்து கிளையாறுகள் பிரிவதும் அவற்றிற்கும் கடலுக்கும் இடையே கழிமுகத் தீவுகள் ஏற்படுவதும் அந்த ஆற்றின் மிகுந்த தொன்மையை அறிவிக்கின்றன என்று புவியியல் ஆராய்ச்சி அறிஞர்கள் கருதுகின்றனர். பல்லாயிரம் ஆண்டுகளாக ஆற்றில் அடித்துக்கொண்டு வரப்படும் பொருட்கள் முகத்துவாரத்தில் படியப் படிய அதனால் ஆறு நேரே சென்று கடலில் கலப்பதற்குத் தடை ஏற்படுகின்றது. அடித்துக் கொண்டு வரப்பட்ட பொருள்களின் படிவுகளால் முகத்துவாரப்பகுதி மேடிடுகிறது. அதனால் ஆறு நேரே சென்று கடலில் கலப்பதற்குத் தடையேற்படுகிறது. ஆனால் ஆறு கடலில் கலக்கும் இடத்திற்கு முன்னால் அதிலிருந்து கிளையாறு தீவுகள் ஏற்படுகின்றன. இவ்வமைப்பில் பல்வேறு வகையான பொருள்களை அடித்துக் கொண்டு வரும் ஆற்று நீரிலுள்ள பலபொருள்கள், உயிரினங்கள் இம்மேடிப்பட்ட கரை பகுதிகளில் ஒதுக்கப்பட்டன. அவை நாளடைவில் மண்ணில் புதைந்துவிடும்.

இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் தென்னிந்தியா கடலாக இருந்தபொழுதில் மலையிலிருந்து அடித்துக் கொண்டுவரப்பட்ட மரங்கள், உயிரினங்கள் அலைகளால் கடலில் அமிழ்ந்து நாளாவட்டத்தில் மண்ணில் புதைந்து இறுகி கல்லாக மாறிவிடும் எனப் புவியியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

மண்ணில் புதையுண்ட மரங்களின் உயிரணுக்களிடையே மண்ணுக்குள் உள்ள சிலிகா கரைசல் படிவு புகுந்து கல்போல் இறுக்கி விடுகின்றன. பின்னர் நாளடைவில் மேலேயுள்ள மண் பகுதி கரைந்து நீங்கி போக உள்ளிருந்த கல்மரங்கள் வெளித்

தோன்றிவிடும். இவ்வாறு கல்லாக மாறிய மரங்கள் ஏறக்குறைய 16 கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்க வேண்டும் எனவும் மரங்களைப் போலவே மீன், தவளை முதலிய உயிரினங்களும் கல்லாக மாறுவதுண்டு. இது ஆங்கிலத்தில் 'பாலியந்தாலஜி' என அழைக்கப்படுகின்றது. உயிரினங்களின் உடம்பிலுள்ள உயிர் அணுக்களுக்குள்ளே 'கால்சியம் கார்பனேட்' சிலிகா கரைசல் படிவு போன்றவை புகுந்து கல்லாக இறுகிவிடும். இவ்வாறு கல்லாக மாறிய உயிரினங்கள் நாற்பத்தைந்து கோடி ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியிருக்கக்கூடும் என்றும், கடற்கரை பகுதிகளில்தான் இது நடைபெறும் என ஆராயின் கெடிலத்தின் தொன்மைக்குச் சான்றாக கடலூருக்கு அண்மையில் உள்ள பாதிரிக்குப்பம் என்னும் சிற்றூரைச் சேர்ந்த முத்தால் நாயுடு என்னும் பகுதியில் மண் தோண்டும் வேலையில் ஈடுபட்டிருந்தபொழுது கல்லாக மாறிய மரப்பகுதிகள் மண்ணுக்கடியில் புதைந்து கிடைக்கக் கண்டதாகக் கூறினர் என்ற பதிவு இங்கே கருத்தில் கொள்ளத்தக்கது. தமிழ்நாட்டில் சில இடங்களில் கல்மரங்களைக் காணலாம். புதுச்சேரிக்கு வடமேற்கே 21கி.மீ தொலைவில் செஞ்சியாறு எனப்படும் சங்கராபரணி ஆற்றங்கரையில் திருவக்கரை என்னும் ஊர் ஒன்று உள்ளது. இது திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல் பாடப்பெற்ற திருப்பதியாகும். இவ்வூரை ஒட்டி 24 ஏக்கரில் 200-க்கும் மேற்பட்ட கல்மரங்கள் படுத்துக்கிடக்கின்றன. இந்திய புவியியல் துறை கல்மரப் பூங்கா என்ற பெயரில் இப்பகுதியைப் பாதுகாத்து வருகின்றனர். கல்லாய் மாறிய இம்மரங்கள் மண்ணில் புதைந்து 2 கோடி ஆண்டுகள் ஆகியிருக்கும் எனவும் அவ்வறிஞர்கள் பெயர் பலகையில் பொறித்துள்ளனர். அதே போல அரியலூர் அருகிலுள்ள சாத்தனூர் எனும் ஊரில் ஓர் ஓடையின் குறுக்கே ஒரு பெரிய முழுக்கல்மர வேர்கள் கிளைகளுடன் கிடைத்துள்ளது. இதிலிருந்து நமக்கு ஒரு உண்மை புலப்படும். தென்பெண்ணை ஆறு குடகு மலையை ஒட்டிய நந்தி மலையில் உருவாகி கடலூரில் முடியும் இந்நிகழ்வானது பல லட்சம் ஆண்டுகளாக நிகழும் தொன்மையுடையது என்பதை அறியமுடிகின்றது. தென்பெண்ணை ஆற்றின் கிளை ஆறாக உள்ள கெடிலம் ஆற்றங்கரையை ஒட்டி கிடைத்த கல்மரத்தின் பழமை 2 கோடி ஆண்டு எனில் இவ்வாற்றின் பழைமையை இன்னும் நீட்டிக்க முடியும்.

**போந்தை பெண்ணை**

திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு வட்டம் தானிப்பாடிக்கு அருகில் தென்பெண்ணை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள சிற்றூர் போந்தை என்பதாகும். இவ்வூரின் பழைமையை அறிய முற்படும்பொழுது தமிழில் கிடைத்துள்ள முதல் நூலான தொல்காப்பியத்தில் போந்தை எனும் சொல் கையாளப் பெற்றுள்ளது.

**"போந்தை வேம்பே யாரென வரூஉம்**
**மாபெருந் தானையர் மலைந்த பூவும்" (தொல்.பொ.60)**

என்ற நூற்பாவில் போந்தை எனும் சொல் இளம்பனை என்னும் பொருண்மையில் பயன்படுத்தப்பட்டுள்ளது அறியலாகிறது. தொல்காப்பியத்தைத் தொடர்ந்து,

**"வெண் மணற் பொதுளப் பைங்கால்**
**போந்தை குடுமி" (குறுந்தொகை-281:1-2)**

என்ற பாடலில் பனைமரம் என்னும் வகையில் இச்சொல் கையாளப்பட்டுள்ளது.

**பெண்ணை**

பெண்ணை எனும் சொல் இலக்கியங்களில் பனைமரம் என்றே பதியப்பெற்றுள்ளன.

**"மன்றப் பெண்ணை வாங்குமடற் குடம்பை"**

(நற்றிணை-303)

"பெண்ணையம் படப்பை நாடு கிழவோயே"

(புறநானூறு-126)

"மடல்தாழ பெண்ணை எம்சிறு நல்ஊரே"

(குறுந்தொகை-81)

"பெண்ணையெனு நதியாறு கடந்து"

(கலிங்கத்துப்பரணி-354)

என மேற்கூறியப் பாடல்கள் இலக்கியங்களில் பயிலப்பட்டு வருவதை அறிய முடிகிறது.

தொல்காப்பியம் குறிப்பிடும் போந்தை எனும் சொல் இளம்பனை எனப் பயின்று வருகின்றது. சங்க இலக்கியங்களில் வரும் பெண்ணை என்ற சொல் ஆற்றைக் குறிக்கவும் பனை மரத்தை குறிக்கவும் பயன்படுத்தியுள்ளனர். புறநானூற்றில் மலையமான் திருமுடிக்காரியின் வளத்தைக் கூற வந்த புலவர் பெண்ணையாற்றின் வளத்தினால் சிறந்த நிலங்களை உடைய தலைவனே எனக் கூறுகின்றார். இதன் வாயிலாக பனை மரங்களை இரு கரைகளிலும் கொண்டு பெண்ணையாறு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு அமைந்திருக்க வேண்டும். அக்காரணம் பற்றியே 'பெண்ணை ஆறு' என்றும் இவ்வாற்றை ஒட்டிய ஊருக்குப் போந்தை எனவும் பெயரிட்டு இருக்கின்றனர் தொல் தமிழ்ப்புலவர்கள்.

**கல் ஆயுதம்**

வீரணத்தையொட்டியுள்ள பெருந்தோணி மலைப்பகுதியில் தென்பெண்ணை ஓடியதற்கான வழித்தடங்கள் தெரியவருகிறது. அந்த மலைப்பகுதியில் கற்கால மனிதர்கள் பயன்படுத்திய 'கல் உளி' கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சொரசொரப்பான கல்லாக உள்ள உளியின் எடை 161 கிராம். கூம்பு வடிவில் உள்ள உளியின் வெட்டுப்பகுதி 6 செ.மீ. நீளத்திலும் அகலத்திலும் 8 செ.மீ கனத்திலும் 12செ.மீ சுற்றளவிலும் உள்ளது. வழவழப்பான கல் ஆயுதங்கள், கற்கருவிகளை புதிய கற்காலம் என்றும், சொரசொரப்பான கல் ஆயுதங்களை மற்றும் கருவிகளை பழைய கற்காலம் என தொல்லியல் துறையினர் கூறுகின்றனர். அதன் மூலம் வீரணம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கற்கருவியானது பழைய கற்காலத்தைச் சேர்ந்தது என்று உறுதி செய்யப்படுகின்றது.

**தாய் தெய்வக்கல்**

தென்பெண்ணை ஆற்றை ஒட்டியுள்ள தானிப்பாடிக்கு அருகிலுள்ள தா.மோட்டூர் எனும் ஊர்ப்புறத்தே தாய் தெய்வக்கல் சேர்ந்த மனித உருவத்தைப் போன்ற தலையில்லா சிலை காணப்படுகின்றது. இவ்வுருவத்தை ஒத்த சிலைகள் வேட்டவலம் அருகே உடையார் நத்தத்திலும் என இரண்டு இடங்களிலும் காணப்படுகின்றது. இதே போன்ற உருவொத்த சிலை ஆஸ்த்திரேலியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் தொன்மை 50000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என தொல்லியல் அறிஞர்கள் மதிப்பிடுகின்றனர்.

**குகை பாறை ஓவியங்கள்**

தென்பெண்ணையாற்றின் வடகரையை ஒட்டி விழுப்புரம் திருக்கோவிலூர் சாலையில் முகையூர் சத்தியகண்டனூரைக் கடந்து வடக்கே 3 கி.மீட்டர் தொலைவில் ஆலம்பாடி அமைந்துள்ளது. தமிழர்களின் தொன்மையானப் பண்பாட்டுத் தடங்களில் குறிப்பிடத் தகுந்தவையாக இருப்பவை பாறை ஓவியங்களாகும். பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில் இல்லாத ஓவிய உருவங்கள் எலும்பு கூடுகள் இப்பாறை ஓவியங்களில் காணப்படுவதுதான். விலங்குகள், மான், எருது, பன்றி போன்றவை தடித்த வரைகோடுகளால்

வரையப்பட்டு சிவப்பு நிறம் தீட்டப்பெற்றுள்ளது. எழுத்து மரபிற்கு முந்தைய வடிவமான குறியீடுகளும் காணப்படுகின்றன.

**பெருங்கல் வட்டம்**

தொல்காப்பியத்தில் ஆநிரை மிட்டல் கவர்தலுக்காக போர்கள் நடைபெற்றுள்ள பதிவினைக் காணமுடிகிறது. இப்போரில் இறந்துபட்ட வீரனுக்கு கல் எடுக்கும் மரபும் போற்றப்பெறுகிறது. தொல் தமிழர்கள் இறந்தவர்களைப் புதைக்கும் குழிகளின் மேலும், அக்குழிகள் கால வெள்ளத்தில் பாழ்படாமலிருக்க அவைகளைச் சூழ்ந்து கற்களை வட்டமாக அடுக்கியும் வைப்பர். பெரும்பாலும் ஈமத்தாழி, ஈமப்பெருட்கள், ஈமப்பேழைகள் கொண்டு புதைக்கப்பட்ட இடத்தின்மீது ஒரு பெருங்கல் நிறுத்தப்படும் அல்லது நாற்புறமும் நான்கு பலகைக் கற்கள் நிறுத்தப்பட்டு மேலே வட்டமாகவோ, சதுரமாகவோ நேர்த்தியாக வெட்டியெடுக்கப்பட்டிருக்கும். ஆய்வாளர்கள் இவற்றை பெருங்கல் வட்டம், பெருங்கற்கால கற்குவை, கல்திட்டை, கல்பதுக்கை என அழைக்கின்றனர். வரலாற்றுக் காலத்திற்கு முந்தையதாக அறியப்படும் இப்பெருங்கல் வட்ட அமைப்பு தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தென்பெண்ணை ஆறு ஓடிவரும் இரண்டு கரைகளை ஒட்டியப் பகுதிகளில் ஆயிரக்கணக்கில் காணப்படுகின்றன.

கிருஷ்ணகிரி அருகே மகாராஜாக்கடை, மல்லசமுத்திரம் போன்ற மலைப்பகுதிகளிலும் குருவி நாயனப்பள்ளியிலும் உள்ள கல் பதுகைகளில் பெருங்கற்கால ஓவியங்களுடன் நடுகல் அமைப்புடைய ஓவியங்களும் உள்ளன. திருவண்ணாமலை மாவட்டம் என எடுத்துக் கொண்டால் தென்பெண்ணை ஆற்றங்கரையை ஒட்டிய இரு பகுதிகளிலும் இப்பெருங்கல் வட்டமானது நூற்றுக்கணக்கில் குவியல் குவியலாக காணப்படுகின்றன. தா.மோட்டூர் அருகில் மலையனூர் செக்கடி மலையடிவாரம் தொடங்கி தாய் தெய்வக்கல் வரை பரந்துபட்ட குவியல்கள் அமைந்துள்ளன. சாத்தனூர் வீரணம் தண்டராம்பட்டு தொண்டைமானூர் பெருங்களத்தூர் என தென்பெண்ணை ஆற்றின் இரு கரையோர வாழ்விடங்களிலும் இக்கல் வட்டங்கள் மிகுதியான எண்ணிக்கையில் அமைந்துள்ளன.

தென்பெண்ணை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள பெருங்களத்தூரில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழி நான்கு அடி உயரமுள்ளது. தாழியின் உள்ளே வாய்ப்பகுதிக்கு அடியில் கொக்கிப் போன்ற அமைப்புடன் காணப்படும் இத்தாழி தற்போது வேலூர் அரசு அருங்காட்சியகத்தில் வைக்கபட்டுள்ளது. பெருங்குளத்தூரிலிருந்து தென்பெண்ணை ஆற்றுக்கு வரும் வழிப்பாதையில் அமைந்துள்ள ஊர் தொண்டைமானூர். இவ்வூருக்கு அருகாமையில் உள்ள பெரும்பாறைகளில் எழுத்துரு இல்லாத கீறல் எழுத்துக்கள் காணப்படுகின்றன. தொண்டைமானூரில் ஏரிக்கரையை ஒட்டிய பகுதிகளில் நான்கு கல் பதுக்கைகள் காணப்படுகின்றன. அவற்றில் இரண்டு நிலப் பயன்பாட்டிற்காக அவ்வூர் வேளாண் பெருங்குடிகள் அழித்துவிட்டனர். களத்திற்குச் சென்று அவ்விடத்தை ஆய்வு செய்யும்பொழுது அக்கல் திட்டையை அழித்த முதியவரைக் காண நேர்ந்தது. அவர் தெரிவித்த கருத்தின்படி அக்கல் பதுக்கையில் கருப்பு சிவப்பிலான வழவழப்பான பானைகள், சொப்புகள், சாடிகள், ஆறு கால்களையுடைய பேழை இருந்ததாகவும் அந்த ஈமப்பேழையை மாட்டிற்கு நீர் காட்டும் தொட்டியாக பயன்படுத்தி இருந்தமையும் தெரியவந்தது. அந்தப் பேழை உட்பட பல பொருட்களை நாம் கொஞ்சம் நெருங்கிச் சென்று கேட்டபொழுது அவருடைய பெயரன் காண்பித்தார். அந்தப் பானையின் மேல் சுண்ணாம்புக் கலவை விடுபடாமல் உள்ளது. அதில் கீறல்கள் இருப்பது தென்படுகின்றது.

தென்பெண்ணை ஆற்றின் வட கரையில அமைந்துள்ள ஊர் சாத்தனூர். இச்சாத்தனூர் மலைப்பகுதியை ஒட்டி ஏராளமான கல்வட்டங்கள் காணப்படுகின்றன. சாத்தனூருக்கு அருகமையில் அமைந்துள்ள ஊர் வீரணம். இவ்வூரில் பொன்முடியார் கோயில் அருகே சிறுமலை ஒன்று அமைந்துள்ளது. இம்மலை அடிவாரத்தை ஒட்டி நூற்றுக்கணக்கான பெருங்கல் வட்ட கல்பதுக்கைகள் காணப்படுகின்றன. இப்பகுதியிலுள்ள பெருங்கல் வட்டங்களினூடாக நரிவெங்காயம் கிழங்குகள் போன்றவை விளைந்துள்ளதால் குள்ளநரி, காட்டுப்பன்றி போன்றவை இக்கல் வட்டங்களில் உள்ள உணவுகளைத் தோண்டி எடுத்தவிட்டுச் சென்றவுடன் அக்குழிகளில் அமைந்துள்ள பானைகள், தாழிகள் போன்றவைகள் வெளியே தெரிந்துள்ளன.

இதைக் கண்ட அவ்வூர் விவசாயிகள் கூறிய தகவலின் அடிப்படையில் கட்டுரையாளர் அக்கல்வட்டங்களில் உள்ள பானைகளையும் தாழிகளையும் அகழ்ந்து பார்த்து ஆய்வு செய்ததில் சிவப்பு கருப்பிலான வழவழப்பு பானைகள், கிண்ணங்கள், சாடிகள், ஈமப்பேழை ஆகியவை கண்டெடுக்கப்பட்டன. அப்பானைகளினூடாக நெல் உமிகள், இரும்பு, எலும்புத் துண்டுகள், மண்டை பகுதியுடன் கூடிய பற்கள் ஆகியனவும் உள்ளடங்கியிருந்தன. இப்பானைகளையும் மட்கலன்களையும் சுத்தம செய்து பார்த்ததில் அனைத்து பானை சாடிகளிலும் கீறல் எழுத்துக் குறியீடுகள் காணப்படுகின்றன. இது போன்ற கீறல் குறியீடுகள் இலங்கை போன்ற பல பகுதிகளில் கிடைத்துள்ளன. இப்பானைக் கீறல் குறியீடுகள் பிராமி எழுத்து வடிவத்திற்கு முந்தைய வடிவம் என்றும் அரசனையோ இனக்குழுத் தலைவனையோ குறிக்கும் வகையிலும் இக்குறியீடுகளைப் பயன்படுத்தியிருக்கலாம் எனத் தொல்லியல் அறிஞர் முனைவர் அர.பூங்குன்றனார் குறிப்பிடுகின்றார்.

**இரும்பு உருக்காலைகள்**

இரும்பு உருக்காலைகள் இயங்கியதற்கு அடையாளமாக சுடு மண்ணால் செய்யப்பட்ட பழைய ஊதுளை துருத்தி கருவிகளும், சுடு மண்ணால் செய்யப்பட்ட வார்ப்பு அச்சுகளும் வீரணம் அருகே எரிமேடு என்று சொல்லப்படும் பகுதியில் காணப்படுகின்றது.

**தமிழ்ப் பிராமி**

தென்பெண்ணை ஆற்றங்கரையின் வடப்பகுதியில் அமைந்துள்ள சம்பை (ஜம்பை) எனும் ஊரிலுள்ள ஏரியின் நடுவில் அமைந்துள்ள பெரிய பாறைக் குன்றில் தமிழின் தொல்வடிவமான தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறித்த கல்வெட்டு அமைந்துள்ளது.

**"சதிய புதோ அதியமானநெடுமானஞ்சி**
**ஈத்த பாழி"**

என்ற பொருளுடைய இத்தமிழ் பிராமிக் கல்லெட்டு இந்திய வரலாற்றில் திருப்புமுனையை ஏற்படுத்தியதாகும். சேர, சோழ, பாண்டியர்களோடு சத்தியபுத்திரரையும் இணைத்து எழுதப்பட்ட அசோகனது கல்வெட்டிற்கு விளக்கம் கொடுக்கும் வகையில் அமைந்திருக்கின்றது. இக்கல்வெட்டு அசோக பிராமி எழுத்திற்கு முந்தைய தமிழ் வடிவமாகும்.

**அதியமான் நாணயம்**

தென்னிந்திய நாணயவியல் கழகத்தின் தலைவர் இரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களால் தகடூர் பகுதியில் நாணயம் சேகரிப்பவரிடமிருந்து வாங்கிய நாணயம் அதியமான் பெயரைத் தாங்கி குதிரையுடன் வீரன் ஒருவன் அமர்ந்திருப்பது காட்சியளிக்கின்றது. இதன் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மலையமான் நாணயம்**

கி.மு ஒன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த மலையமான் திருமுடிக்காரி நாணயம் தென்பெண்ணை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள அவனது தலைநகரமான திருக்கோவிலூர் பகுதியில் கிடைத்ததாகும். நாணயத்தின் முன்பக்கம் வலதுபுறம் நோக்கி நிற்கும் குதிரை அதற்கு மேலே ஆயுதம் அதற்கு மேலே கோட்டுருவில் எருது தலைச்சின்னம் பொறிக்கப்பட்டுள்ளன. நாணயத்தின் பின்புறம் ஆற்றின் கரை கோடுகளால் காட்டப்பட்டுள்ளது. நேராக ஒரு வேலும் படுக்கவாட்டில் ஒரு வேலும் உள்ளன.

**நடுகற்கள்**

தென்னிந்தியாவில் கண்டறியப்பட்டுள்ள நடுகற்களில் 80 விழுக்காடு நடுகற்கள் தென்பெண்ணை ஆறு, பாலாறு, சேயாறு ஒட்டிய பகுதிகளில் அதாவது கிருஷ்ணகரி, தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன. இவற்றில் வேலூர் மாவட்டத்தைத் தவிர்த்து நான்கு மாவட்டங்களில் தென்பெண்ணை ஆறு ஓடுகிறது. பெரும்பாலும் நடுகற்கள் ஒட்டிய பெருங்கல் சின்னங்களுக்கிடையேயும் நீர்நிலைகள் (ஆறு, ஏரி, ஓடை) ஒட்டியே காணப்படுகின்றன.

சங்க காலத்தில் மன்னர்கள் ஆநிரைப் போர்களில் நேரடியாக ஈடுபட்டதற்குச் சான்றுகளாகப் புறநானூறும் பதிற்றுப்பத்தும் விளங்குகின்றன. தென்பெண்ணையின் வளத்தினால் சிறந்திருந்த மலையமான் திருமுடிக்காரியோ ஆநிரைகளைக் கவர்ந்து வந்துள்ளான்.

தென்பெண்ணை ஆற்றை ஒட்டிய மாவட்டங்களில் உள்ள ஊர்களில் காலத்தால் தொன்மையானதாக தருமபுரி மாவட்டம் அரூர் மாவட்டத்திலுள்ள பாப்பண்பாடி(இருளப்பட்டி)யில் கிடைக்கும் தமிழ் வட்டெழுத்துடன் கூடிய கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாணர்களின் கல்வெட்டு தொடங்கி திருவண்ணாமலை மாவட்டம் பாளையம்பட்டு கிராமத்திலுள்ள வட்டெழுத்துடன் கூடிய நடுகல்லும் இக்காலக்கட்டத்தில் அடங்கும். தருமபுரி மாவட்டம் அரூர் வட்டத்திலுள்ள கோரையாறு பகுதியில் இரண்டு நடுகற்கள் பெரும்பாணர்க்குரிய 5 -6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவை ஆநிரைப் பூசலுக்காக எடுக்கப்பட்டவையாகும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றை ஒட்டி பெருங்களத்தூரில் சிங்கவர்மனின் வட்டெழுத்திலான நடுகல் கி.பி 529 ஆம் காலத்தைச் சார்ந்தது. இதையடுத்து தொண்டைமானூரில் சிம்மவிஷ்ணு (கி.பி. 518) காலத்தில் வட்டெழுத்திலான நடுகல் அமைந்துள்ளது. முதலாம் மகேந்திரவர்மன் காலத்திய (கி.பி.622) வட்டெழுத்திலான நடுகல் மோத்தக்கல்லில் இரண்டு நடுகற்களும், எடுத்தனூரில் கி.பி.624 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட நாய்க்கன் நடுகல்லும் மல்லிகாபுரத்தில் கி.பி. 679ஆம்ஆண்டில் எடுக்கப்பட்ட நடுகல்லில் போந்தை என்ற ஊர்ப் பெயரும் வந்துள்ளது. முதலாம் நரசிம்மவர்மன் காலத்தைச் (கி.பி.637) சேர்ந்த நடுகற்கள் இரண்டும், தண்டராம்பட்டில் கி.பி.641 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட நடுகல் உள் சாத்தனூரிலும், தென்பெண்ணையாற்றைக் குறிப்பிடும் வகையில் முதலாம் நரசிம்மவர்மன் காலத்தைச் (கி.பி.7) சேர்ந்த நடுகல்லில் பெண்ணை வடக்கரை என்ற வாசகம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கவையாகும். இரண்டாம் நரசிம்மன் காலத்தைச் (கி.பி.703) சேர்ந்த நடுகல் ஒன்று தானிப்பாடி அருகிலுள்ள தா.வேலூரில் கி.பி.711 ஆம் ஆண்டிற்கான நடுகற்கள் இரண்டு வேப்பூர் செக்கடியிலும் கி.பி.713 ஆம் ஆண்டிலான இரண்டு நடுகற்கள் போந்தை என்ற ஊரிலும், கி.பி. 729 ஆம்

ஆண்டிலான நடுகல் ஒன்று சாத்தனூர் (மல்லிகாபுரம்) கிராமத்திலும் கிடைக்கின்றன. கி.பி.9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கம்பவர்மன் காலத்திலான நடுகல் சின்னய்யன் பேட்டையிலும் தானிப்பாடி அருகிலுள்ள தா.வேலூரில் என இவ்வாற்றங்கரையின் இரு பகுதியிலும் ஆயிரமாண்டு வரலாற்றைச் சுமந்து கொண்டுள்ள நடுகற்களை காணவியலும்.

- நிலவியல் அடிப்படையில் குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்தலும் ஒருங்கே வளம் பெற்றிருக்கக்கூடிய பகுதியாக இத்தென்பெண்ணை ஆறும் பாயும் பகுதி அமைந்திருப்பதால் இப்பகுதி பூமியில் நடுநடாகப் போற்றப்படும் தகவமைப்பை இயற்கையாகவே பெற்றிருக்கின்றது.

- தென்பெண்ணை ஆற்றின் வயதைக் கண்டறிய முடியாவிட்டாலும் அதன் கிளையாறாகிய மலட்டாறும் கெடிலாறும் காலத்தால் தொன்மையானது என்பதை 2 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய மரம் கல்லாய் மாறிப்போன நிகழ்வும் இங்கேயே அமைந்திருப்பதை அறியலாகிறது.

- கல்லாயுதங்கள், தொல்பழங்கால ஓவியங்கள், பெருங்கல் வட்டங்கள் இவற்றின் வாயிலாகக் கிடைக்கப்பெறும் கீறல்கள் உருவங்கள் எழுத்துப் பொறிப்புகள் ஆகியவை இவ்வாற்றங்கரை நாகரீகத்தின் தொன்மைக்குச் சான்று பகர்கின்றன.

- போந்தை, பெண்ணை ஆகிய இரு சொற்கள் தொல்காப்பியம் தொடங்கி சங்க இலக்கியங்கள் நடுகற்களில் பயன்படுத்தி வந்துள்ளமையையும் அச்சொற்கள் இப்பகுதியோடு பொருந்துமாற்றையும் எடுத்துரைப் பெற்றுள்ளன.

- சம்பை (ஜம்பை) பாழியில் கிடைக்கும் தமிழி எழுத்தானது அசோக-பிராமி காலத்திற்கு முற்பட்டது என அறியலாகிறது.

- அதியமான் மலையமான் நாணயங்களின் வாயிலாக இப்பகுதியின் வணிக வளத்திலான வாழ்வியல் முறைகள் உணரலாகிறது.

- பெருங்களத்தூரில் கிடைத்த முதுமக்கள் தாழியும், தொண்டைமானூரில் சிதைக்கப்பட்ட பெருங்கல் வட்டமும், வீரணம் அகழ்வாய்வில் கிடைத்த பானைகள், ஜாடிகள் (ரௌலட் வகை) கிண்ணங்கள் 6,8,12 கால்களையுடைய பேழைகள், எலும்பு, இரும்புத் துண்டுகள், நெல் உமிகள், மண்டையோட்டோடு கூடிய பற்கள், பானைகளில் கிடைக்கும் கீறல்கள் என அனைத்து வளங்களோடு கூடிய தொன்மையான நாகரீகத்தின் தொட்டிலாக அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

- ‘பெண்ணையம் படப்பை நாடு கிழவோயே, குன்று சூழ் இயற்கை நாடு கிழவோனே’ என்ற சொற்றொடரே இப்பகுதியின் வளத்தினை நமக்கு பறைசாற்றுகின்றன. அதனால்

பதிப்பகம்

இப்பகுதியில் வாழ்ந்த மக்களை ‘பதிஎழல் அறியாப் பழங்குடிக் கெழிஇய’ என்ற சிறப்பினை பெறமுடிந்தது.

- உலகிலுள்ள மற்ற நாகரீகங்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றி மற்றொரு காலக்கட்டத்தில் மறைந்துவிட்டன. (சிந்து சமவெளி நாகரீகம் உட்பட) இந்த நாகரீகங்கள் அனைத்தும் தொடர்ச்சியாக நிலைத்த வாழ்வியல் கூறுகளைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் தென்பெண்ணை ஆற்றங்கரை நாகரீகம் மட்டுமேதான் 2 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட மரங்கள் கல்லாய் மாறிப்போன அதிசயங்கள் தொடங்கி தொல்பழங்காலக் கீறல் ஓவியங்கள், கீறல் எழுத்துக்கள், கற்கருவிகள், பெருங்கற்காலம், புதிய கற்காலம், இரும்புக்காலம், சங்க காலத்திற்கு முன்பும் பின்புமான இலக்கிய வளம், தமிழி எழுத்துக்கள், வட்டெழுத்துக்கள், தாய் தெய்வக்கல், நடுகற்கள் என நீண்டதொரு மரபினைப் பெற்று இன்றும் நிலைத்து நிற்கின்றது என்பதை உணரலாகிறது.

புதிய அலை